தளம்
THALAM

தளத்தின்

விருட்சம்

ஜீளை – 2024

தளை –06

WORLD
ENVIRONMENT DAY

தளத்தின்

விருட்சம்

கிளை – 2024
துளை –06

உள்ளடக்கம்

- தளம் - முன்னுரை ஆசிரியர் பக்கம்
- வாழ்க்கை வரலாறு
- அறிவியல் அம்சங்கள்
- அறிந்தும் அறியாததும்
- இளையோர் கைவண்ணமும் எழுத்தாற்றலும்
- மருத்துவ பக்கம்
- தளத்தின் தடங்கள்
- இதழாசிரியர் குழாம்

முன்னுரை

“ஊக்கமது கைவிடேல்” என்பதற்கு இணங்க தளர்ந்து போகாது ஆறாம் அத்தியாயத்தை உங்கள் கண் முன் கொண்டு வருகிறது நம் விருட்சம்.

இளையோரின் கைவண்ணத்தில் உருவான பல்துறை சார்ந்த சுவாரசியமான அறிவுப்பொதிகள் பலவற்றை தேக்கியபடி மாறுபட்ட கோணத்தில் பிரசுரிக்கப்படும் விடயங்களையும் எம் எண்ணவோட்டங்களையும் இணைத்துள்ளோம்.

சவால்கள் பல நிறைந்த இவ்வுலகில் பல தடைகளைக் கடந்து “மாற்றம் ஒன்றே மாறாதது” என்பது போல மெருகூட்டப்படும் நம் விருட்சத்தின் மாதாந்த மாற்றங்களையும் வாசித்து பயன்பெறுவீராக.

ஆசிரியர் உரை

அன்பார்ந்த தோழர்களே...

தளம் அமையத்தின் ஒருங்கிணைப்பில் திருமலை இளைஞர்கள் கைவண்ணத்தில் கடந்த மாதம் வெளிவந்த விருட்சம் மாத இதழானது வாசகர்கள் மத்தியில் பெரும் வரவேற்பை பெற்றது.

இவ்விதழை திறம்பட வெளியிட உதவிய நண்பர்கள், வாசகர்கள் அனைவருக்கும் எமது நன்றிகளை சமர்ப்பிப்பதோடு விருட்சத்தின் கடந்த மாத கிளையின் வரவேற்பு எம்மை அதிக உற்சாகத்துடன் இம்மாத இதழினை உங்கள் முன் கொணர பெரும் தூண்டுதலாக இருந்தது.

அத்துடன் கடந்த மாதம் வெளிவந்த விருட்சம் மாத இதழ் திருமலையின் பல நூலகங்களில் மற்றும் பாடசாலை நூலகங்களிலும் வன்பிரதியாக கிடைக்கும். இம்மாத இதழானது முற்றுமுழுதாக மாணவர்களுக்காக தயார் செய்யப்பட்டு வெளிவருகிறது. வாசித்து பயன்பெறுங்கள்.

கடந்த மாத இதழின் விமர்சனங்களை கருத்தில் கொண்டும் இம்முறை இவ்விதழிலானது பல மாற்றங்களுடனும், புது குழுவுடனும் புதுப்பொலிவுடன் உங்கள் கைகளில் கிடைக்கும்.

இவ்விருட்சமானது இத்திருமலை மண்ணில் மேலும் கிளை விட்டு துளிர்க்க உங்கள் ஆதரவினை படைப்புகளாக எதிர்பார்க்கிறோம். இவ்விதழை பற்றிய கருத்துக்கள், விமர்சனங்கள் மற்றும் ஆக்கங்களை அனுப்பி வைக்க வேண்டிய தொலைபேசி இலக்கம் – 0776243212

வாழ்க்கைக் கதை..!

உலகிற்கே தன்னம்பிக்கை நாயகனாக விளங்கிய ஸ்டீபன் ஹாக்கிங்கின் வாழ்க்கை வரலாறு.

ஸ்டீபன் வில்லியம் ஹாக்கிங் அரிய வகை நோயால் பாதிக்கப்பட்டு வீல் சேரில் முடங்கினாலும் தன்னுடைய இயற்பியல் ஆய்வில் தொய்வு காணாத மிகப்பிரபல விஞ்ஞானி. தன்னம்பிக்கையின் நாயகனாகவும் விளங்கிய இந்த விஞ்ஞானி இன்று உலகை விட்டு மறைந்திருக்கிறார். யார் ஸ்டீபன் ஹாக்கிங் அவர் செய்த சாதனைகள் என்ன?

இங்கிலாந்திலுள்ள ஆக்ஸ்போர்டில் ஜனவரி 8, 1942ம் ஆண்டு பிறந்தவர் ஸ்டீபன் வில்லியம் ஹாக்கிங். இவருடைய தந்தையும் ஒரு இயற்பியலாளர், வெப்ப மண்டல நோய்கள் குறித்த ஆய்வை இவர் செய்தார். ஸ்டீபனின் தாயார் லிபரெல் கட்சியில் இருந்தார்.

இவரின் பெற்றோர் நல்ல கல்வி பின்புலத்தை கொண்டவர்கள், ஸ்டீபனுக்கு 4 உடன்பிறந்தவர்களும் உள்ளனர். பள்ளி சென்று பாடங்கள் படிக்காமல் எப்போதும் தன்னை சுற்றி புத்தகங்களை வைத்துக் கொண்டு பிடித்தவற்றை படித்து வளர்ந்தவர் ஸ்டீபன். இதனாலேயே ஸ்டீபனை அவரது நண்பர்கள் ஐன்ஸ்டீன் என்று செல்லப்பெயரிட்டு அழைத்தனர்.

பள்ளி செல்லாத ஸ்டீபன்

புத்தகங்களே வாழ்க்கையாக இருந்த ஸ்டீபன்

1962ம் ஆண்டில் பட்டதாரியான ஸ்டீபன், கேம்பிரிட்ஜ் பல்கலைக்கழகத்தில் மேற்படிப்புக்கு சேர்வதற்காக இறுதித் தேர்வு எழுதி தேர்ச்சி பெற்றார். இயற்பியல் என்பது எப்போதுமே ஒரு போரான பாடமாகத்தான் பள்ளி காலங்களில் இருந்தது. ஆனால் வேதியியல் மிகவும் பிடித்தமானதாக இருக்கும், ஏனெனில் அதில் எதிர்பாராத விஷயங்கள் நடக்கும் என்று ஹாக்கிங் ஒரு முறை குறிப்பிட்டுள்ளார். ஆனால் இயற்பியலும், வானியலும் நாம் எங்கிருந்து வந்தோம், நாம் ஏன் இங்கு இருக்கிறோம் என்பதற்கான புரிதல்களை ஏற்படுத்தும். அண்டம் பற்றி ஆழமாக தெரிந்து கொள்வதே என்னுடைய விருப்பம் என்றும் ஸ்டீபன் கூறி இருக்கிறார்.

என்னென்ன ஆய்வுகள் செய்தார்?......

இவருடைய முக்கியமான ஆய்வுத்துறைகள், அண்டவியலும் , குவாண்ட்டம் ஈர்ப்பும் ஆகும். ஆராய்ச்சித் துறைக்கான இவரது முக்கியமான பங்களிப்புகள், கருந்துளைகளுக்கும் , வெப்ப இயக்கவியலுக்குமான தொடர்புகள் பற்றிய கட்டுரைகளை உள்ளடக்கியவை. கருந்துளையினுள் ஒளியுட்பட எதுவுமே வெளியேறமுடியாது என்று நம்பப்பட்டதற்கு மாறாகக் கருந்துளையினுள் துணிக்கைகள் வெளியேறுகின்றனவென்றும், அதன்மூலம் காலப்போக்கில் இல்லாமல் போய்விடுகின்றன என்றும், இவரது ஆராய்ச்சிகள் காட்டின.

இந்த வெளியேறும் கற்றைக்கு ஹாக்கிங் கதிர்வீச்சு என்று பெயர்.

உடலின் செயல்பாடுகள் முடக்கம்

21 வயதிலேயே, முதலாவது திருமணத்துக்குச் சற்றுமுன்னர் அமையோட்ரோபிக் லேட்டரல் ஸ்க்லெரோசிஸ் , என்னும் நரம்பு நோயால் பாதிக்கப்பட்டார் ஹாக்கிங்ஸ். குணப்படுத்த முடியாத நோயினால் கடுமையாகப் பாதிக்கப்பட்டு, கை, கால் முதலிய உடலியக்கங்களும் பாதிக்கப்பட்டு, பேச்சையும் இழந்தநிலையில் கணினி வழியாகப் பேச்சுத் தொகுப்பி மூலம் மற்றவர்களுடன் தொடர்பு வைத்துக்கொள்ளும் கட்டாயத்துக்குள்ளான இவர், இயற்பியல் ஆராய்ச்சிகளிலும், எழுத்துத்துறையிலும், பொதுவாழ்விலும் மிகவும் ஈடுபாடு உள்ளவராக திகழ்ந்ததோடு வீல் சேரில் இருந்தவாறே பிறருக்கான உந்து சக்தியாகவும் இருந்தார்.

பிரபல புத்தகங்கள்

அமெரிக்காவில் உள்ள அனென்பெர்க் அறக்கட்டளை இயற்பியல் கணிதத்தை மாணவர்களுக்கு எளிய நடையில் புதிய கோணத்தில் வடிவமைப்பவர்களுக்கு 6 மில்லியன் டாலர் பரிசு என 1986-ல் அறிவித்தது. இந்தச் சவாலை ஏற்று, இயற்பியல் அறிவியலாளர் ஸ்டீபன் ஹாக்கிங் அரை மணி நேரத்திற்கு ஒரு காட்சி விளக்கம் வீதம் 26 மணி நேரம் ஓடக் கூடிய 'காலம் ஒரு வரலாற்றுச் சுருக்கம்" என்ற பாடத் திட்டத்தை உருவாக்கிக் கொடுத்துப் பரிசு பெற்றார். இவர் எழுதிய அறிவியல் நூல்களான, நேரத்தின் ஒரு சுருக்க வரலாறு ஆகிய இரண்டும், உலகம் முழுவதும் மிகப் பிரபலமாக விற்பனையாகிச் சாதனை படைத்தன.

மிருகங்களின் நரகம் அது

மிருகக்காட்சி சாலையா? அது எதற்கு நமக்கு வேண்டுமென்றால் காட்டிற்கு பயணம் செய்யலாமே!!!
அது சரி அதற்கு காடுகள் இருக்க வேண்டுமே, அவை இன்று கட்டிடமாக மாறிய காட்சி கண் முன் நிகழ்கிறதே!!!

இப்படித்தான், ஒரு நாள் புறப்பட்டு சென்றேன் மிருகங்கள் பார்ப்பதற்கு. ஏனோ என் கண்களுக்கு கூண்டில் உள்ளது அல்ல வெளியே தெரிந்தது அவைகள். அந்த ஒரு கணம் கண்களை கசக்கி விழித்தெழுந்த போது உணர்ந்தேன் நாம் எவ்வளவு பெரிய பாவம் செய்கிறோம் என்று.

இந்த கொடுமைகள் பார்க்கவா எட்டு மணி நேரம் பயணம் செய்து, வரிசையில் நின்று பற்றுசீட்டு பெற்று சந்தோஷமாக வந்தேனென என்னையே கேவலமாக திட்டினேன். அன்றிலிருந்து எனக்கு ஒவ்வொரு மிருகமும் ஏதோ என்னை திட்டிக் கொண்டிருப்பதாக தோன்றுகிறது.

காட்டுக்கே ராஜா அவன் எழுந்து நடக்க தெம்பில்லை இன்று. அவன் கர்ஜனை சத்தமும்,உறுமும் சத்தமும், கத்தும் சத்தமும், ஊளையிடும் சத்தமும் காட்டையே அலற செய்யும். ஆனால் இங்கே கத்தும் அளவுக்கு சக்தி இல்லை மானிடா!!

இப்படி வேடிக்கை பார்ப்பதற்கு பதிலாக இறந்ததும் தோலை வைத்து பொம்மை செய்து வையுங்கள் அது இன்னும் அருமையாக இருக்கும். எல்லாம் வியாபாரம் தானே!!!!
மறுபுறம் பறவைகள், நாடு கடந்து நாடு செல்லும் எங்களுக்கு இப்படி ஒரு வாழ்வா? இதற்கு எங்கள் இறக்கைகளை எதற்கு??மரத்திற்கு மரம் தாவித்திரியும் குரங்கினமடா!! எங்களை ஒவ்வொரு கூட்டிலே ஒவ்வொன்றாய் வகை பிரித்தீரோ? முட்டாளே!!!
இதற்கு எதற்காக காலும், வாலும்??

இதற்கு முடிவில்லையா? இவற்றிற்கு முற்றுப்புள்ளி இல்லையா?
இப்படித்தான் ஒவ்வொன்றாக நாம் அளிக்கப் போகின்றோமா? அடுத்த சந்ததிக்கு செயற்கை மிருகங்களை காட்டப் போகின்றோமா? சிந்திப்போம்.

முகேஷ்

விவசாயத்தில் பேருதவி புரியும் *IOT* தொழில்நுட்பம்

இன்றைய காலகட்டத்தில் தண்ணீர்ப் பற்றாக்குறையால் விவசாயத்துக்குத் தேவைப்படும் தண்ணீர்ப் பயன்பாட்டை ***IOT*** மூலம் 50மூ முதல் 75மூ வரை குறைத்து, தண்ணீரை வீணாக்காமல் விவசாயத்தை எளிதாகச் செய்வதற்கான வழிவகை இந்த ***IOT***-ல் கிடைத்திருக்கிறது. மேலும், பயிருக்கு ஊட்டச்சத்துகள் தேவையா என்பதை உணர்ந்து, அதற்குத் தேவையான உரங்களை, தேவையான காலத்தில், தேவையான அளவு கொடுப்பதற்கு இந்தத் தொழில்நுட்பம் நமக்கு மிகவும் பயனள்ளதாக இருக்கிறது.

விவசாயிகள் இரவு நேரத்தில் வயலுக்குத் தண்ணீர் மோட்டாரைப் போட்டுவிட்டு, வயலுக்குத் தேவையான அளவு தண்ணீர் செல்லும் வரை உறங்கிக்கொண்டிருப்பார்கள். சில நேரத்தில் நன்கு உறங்கிவிட்டால், தேவையான அளவைவிட அதிக அளவு தண்ணீர் நிரம்பிவிடும், பயிர்களும் வீணாக வாய்ப்பு உண்டு. ***IOT*** தொழில்நுட்பத்தின் மூலம் இந்தப் பிரச்சினையைக் கட்டுப்படுத்த முடியும். வயலில் தேவையான அளவு நீர் நிரம்பிய உடன், பல்வேறு உணரிகள் உதவியுடன் மோட்டார் தானாகவே இயக்கத்தை நிறுத்திவிடும். அதுபோல, விவசாயிகள் வயல்களின் கள நிலைமையை எங்கிருந்தும் கண்காணிக்க முடியும். இந்த வினைதிறன்மிக்க வேளாண்மை பெரிய விவசாயத்தில் மட்டுமல்லாமல், அங்கக வேளாண்மை, சிறு, குறு, நடுத்தர வேளாண்மையிலும் பேருதவி புரியும்.
துல்லிய வேளாண் முறையில் பொருட்களின் இணையத்தின் முக்கியமான பயன்பாடு பயிர் அளவீட்டு முறை என்பதாகும். இது துல்லியமாக அதி நவீன வேளாண் முறைகளுக்குத் தேவையான தீர்வுகளை அளிக்கிறது.

பயிர் அளவீட்டு முறையானது ***IOT*** தொழில்நுட்பத்தில் உள்ள உணரிகள் மூலம் மண்ணின் ஈரப்பதத்தை ஆய்வுசெய்து, என்ன வகையான பயிர்களைப் பயிரிடலாம் விளைச்சலை மேம்படுத்துவது எனப் பல முக்கிய முடிவுகளை எடுக்கும் வகையில் துல்லிய விவசாயத்தில் பயன்படுகிறது. பயிர் வள மதிப்பீடு, நீர்ப்பாசனம், பயிர்க் கண்காணிப்பு, பயிர் தெளித்தல், நடவு செய்தல், மண் மற்றும் களப் பகுப்பாய்வு ஆகிய பயன்பாடுகளுக்கும், நிலத்தடி சார்ந்த ட்ரோன்கள் மற்றும் வான்வழி சார்ந்த ட்ரோன்கள் விவசாயத்துக்காகப் பயன்படுத்தப்படுகின்றன.
இந்த ட்ரோன்களின் மூலம் பயிர்களின் வளத்தை இருந்த இடத்தில் இருந்துகொண்டே கண்காணிக்க இயலும். மேலும், பயிர்களின் தன்மையை எளிதாக ஆராய்ந்து சிறப்பான திட்டமிடலுக்கு இந்த ட்ரோன்கள் விவசாயத்தில் முக்கியப் பங்காற்றுகின்றன. தற்போது வளர்ந்துவரும் தொழில்நுட்பத்தில் ***IOT***-யின் பங்கு அளப்பரியது.



பெர்முடா முக்கோணம்

பெர்முடா முக்கோணம் (சாத்தானின் முக்கோணம்) வட அட்லாண்டிக்கடலில் உள்ள ஒரு பகுதி, அங்கே வானூர்திகள் மற்றும் கப்பல்கள் மர்மமான சூழ்நிலைகளில் காணாமல் போயிருப்பதாகக் கூறப்படுகிறது. அமெரிக்க கடற்படை இம்முக்கோணம் இல்லை என்றும், இதை பற்றிய எந்த புவியியல் பெயருக்கும் அங்கீகாரம் இல்லை என்றும் கூறுகிறது. பொதுவாக அமானுட ஆற்றல் அல்லது உலகத்திற்கு அப்பாற்பட்ட உயிர் களின் செயல்திறன் காரணமாக இந்த நிகழ்வுகள் நடந்ததாக நம்பப்படுகிறது.



முக்கிய புள்ளிகள்:

1. முக்கிய இடங்கள்: புளோரிடா நீரிணைப்பு, பஹாமாஸ், கரீபியன் தீவுகள் மற்றும் பெர்முடா.
2. கப்பல் போக்குவரத்து: உலகின் மிகவும் அதிகமான கப்பல் போக்குவரத்து பகுதியாகும்.
3. திசைகாட்டி மாறுதல்கள்: பொதுவாக மனித தவறு மற்றும் இயல்பான காந்த மாறுபாடுகளால் ஏற்படுகின்றன.
4. திட்டமிட்ட அழிவு நடவடிக்கைகள்: போர் நடவடிக்கைகள் மற்றும் கடற்கொள்ளைகள் பொதுவாக நிகழ்ந்துள்ளன.
5. மீத்தேன் ஹைட்ரேட்டுகள்: மீத்தேன் குமிழிகள் நீரின் அடர்த்தியை குறைத்து, கப்பல்களை மூழ்கச் செய்யக்கூடியவை.
6. முரட்டு அலைகள்: உலகின் பல கடல்களில் காணப்படும் சக்திவாய்ந்த அலைகள், சில கப்பல்கள் மற்றும் எண்ணெய் கப்பல்கள் மூழ்குவதற்கும் காரணமாகும்.

பிரபல நிகழ்வுகள்:

1. பிளைட் 19: 1945-ல், 5 குண்டு வீசும் விமானங்கள் பயிற்சியின் போது காணாமல் போனது. இதைத் தேடும் 13 பேர் கொண்ட மீட்பு விமானமும் காணாமல் போனது.
2. வி.ஏ.ஃபாக்: 1972-ல் தொலைந்தது மனிதத் தவறாக கருதப்பட்டது.
3. ஹார்வே கனோவர்: 1958-ல் தனது பயணப் படகான ரெவோனோகை இழந்தது மனிதப் பிடிவாதம் காரணமாக இருந்திருக்கலாம்.

பயனுள்ள விளக்கங்கள்:
1. சூறாவளிகள்: வெப்பமண்டல சூறாவளிகள் காரணமாக பல விபத்துகள் நிகழ்ந்துள்ளன.
2. மீத்தேன் ஹைட்ரேட்டுகள்: கரையோரப் பகுதிகளில் மீத்தேன் குமிழிகள்.

முக்கியமாக: பல நிகழ்வுகள் மனிதத் தவறாலும், இயல்பான காரணங்களாலும் விளக்கப்படுகின்றன.

கருங்குழி

கருங்குழி அல்லது கருந்துளை என்பது, இவற்றின் எல்லைக்குட் செல்லும், ஒளி உட்பட்ட எதுவுமே வெளியேற முடியாத அளவு வலுவான ஈர்ப்பு சத்தியைக் கொண்டுள்ள, அண்டவெளியின் ஒரு பகுதியாகும். மேற் குறிப்பிட்ட எல்லை நிகழ்வெல்லை எனப்படும். இந்த நிகழ்வெல்லைக்குள் இருந்து பார்க்கக்கூடிய ஒளி அலைகள் போன்ற மின்காந்த அலைகள் கூடத் தப்பி வெளியேற முடியாது என்பதால் உள்ளே நடப்பவை எவற்றையுமே வெளியில் இருந்து அறிந்து கொள்ள முடியாது. இதனாலேயே இதனைக் கருங்குழி என்கின்றனர். கருங்குழிகள் பாரிய நட்சத்திரங்களின்பரிணாமத்தின் இறுதிக்கட்டமாகக் கருதப்படுகிறது. இதற்குக் கன அளவோ, மேற்பரப்போ கிடையாது. ஆனால் இதன் பிரம்மாண்டமானதிணிவு காரணமாக இதுமுடிவிலியான அடர்த்தியைக் கொண்டுள்ளது.

இதனைப் பார்க்க முடியாது எனினும், இதன் நிகழ்வெல்லைக்கு அப்பால் இருக்கும் பொருள்கள் மீது அவை கொண்டுள்ள தாக்கங்கள் மூலம் அவற்றின் இருப்புப் பற்றி அறிந்துகொள்ள முடியும். எடுத்துக் காட்டாக, ஒரு தொகுதி விண்மீன்கள்கருங்குழியொன்றின் ஈர்ப்புக்கு உட்பட்டு அதன் மையத்தைச் சுற்றி வருவது உண்டு. இவ்வாறான விண்மீன்களின் இயக்கத்தை அவதானிப்பதன் மூலம் கருங்குழியின் இருப்பையும் அதன் அமைவிடத்தையும் தெரிந்து கொள்ளலாம். சில வேளைகளில் கருங்குழிகள் அண்ட வெளியில் இருந்து அல்லது அண்மையில் இருக்கும் விண்மீன்களில் இருந்துவளிமங்களைக் கவர்ந்து இழுக்கின்றன. இவ்வளிமங்கள் கருங்குழிகளை வேகமாகச் சுற்றியபடி உட்செல்லும்போது வெப்பநிலைஅதிகரிப்பதனால் பெருமளவுகதிர்வீச்சு வெளிப்படுகின்றது. இவற்றை புவியில் உள்ள அல்லதுவிண்வெளித் தொலைநோக்கிகள்மூலம் உணர முடியும். இவ்வாறான அவதானிப்புகளின் மூலம் கருங்குழிகள் உள்ளன என்னும் பொதுக் கருத்து அறிவியலாளரிடையே ஏற்பட்டுள்ளது.



ஒளியைக் கூடத் தப்பவிடாத அளவுக்கு வலுவான ஈர்ப்பு சக்தி கொண்ட பொருள் பற்றிய எண்ணக்கருவொன்றை 1783 ஆம் ஆண்டில் தொழில்சாராப் பிரித்தானிய வானியலாளரான வண. ஜான் மிச்சல் என்பவர் முன்வைத்தார். 1795 இல் பிரெஞ்சு இயற்பியலாளர் பியரே-சைமன் லாப்பிளாஸ் என்பவரும் இது போன்ற முடிவொன்றை வெளியிட்டார். இன்று புரிந்து கொள்ளப்பட்டவாறான கருங்குழி பற்றிய விளக்கம் 1916 ஆம் ஆண்டில் ஐன்ஸ்டீன் முன்மொழிந்தபொதுச் சார்புக் கோட்பாட்டில் இருந்தே பெறப்பட்டது. போதிய அளவு பெரிதான ஒரு திணிவு போதிய அளவு சிறிதான வெளிப் பகுதி ஒன்றில் இருக்கும்போது சூழவுள்ள வெளி உட்புறமாக மையத்தை நோக்கி வளைந்து அதனுள் இருக்கும் எந்தப் பொருளும்கதிர்வீச்சும் தப்பி வெளியேறாதபடி தடுத்துவிடும்.

பொதுச் சார்புத் தத்துவம் கருங்குழியை, மையத்தில் புள்ளி போன்ற சிறப்பொருமையுடன் கூடிய வெறுமையான வெளியாகவும், அதன் விளிம்பில் உள்ள நிகழ்வெல்லையாகவும் விபரிக்கும் அதே வேளை, குவாண்டம் பொறிமுறையின் தாக்கங்களைக் கருதும்போது இதன் விளக்கம் மாறுகின்றது. கருங்குழிக்குள் அகப்பட்ட பொருட்களை முடிவின்றி உள்ளே வைத்திராமல், கருங்குழிகள் இவற்றை ஒருவித வெப்பச் சக்தி வடிவில் கசியவிடக்கூடும் என இத் துறையிலான ஆய்வுகள் காட்டுகின்றன. இது ஹோக்கிங் கதிர்வீச்சு எனப்படுகின்றது.

நமது சூரியனில் ஹைட்ரஜன் ஹீலியமாக மாறும் இந்த காரணத்தால் அதிக அழுத்தம் ஏற்பட்டு சூரியன் நடுவில் அதிக ஈர்ப்பு விசையை தள்ளும். இது தொடர்ந்து நடந்து கொண்டே இருக்கும் இது நடக்காமல் போனால் தான் கருந்துளை என்ற ஒன்று உருவாகும். சூரியன் வெடிக்கும் போது இருக்கும் நிறை 20 மடங்கு விட அதிகமாக இருந்தால் கருந்நுளை உருவாகும்.

'குமிழி' - தமிழர்களின் தூர்வாரும் தானிப்பொறியியல். எங்கே போனது?



மேலைநாட்டிடம் எதற்குத்தான் தமிழர்கள் மயங்கவில்லை? அவர்களின் மதகுகளில் மதிமயங்கி, ஏரி குளங்களில் இருந்து குமிழிகளை ஒழித்துவிட்டோமா?

ஏரி, குளம், கண்மாய் போன்ற நீர்நிலைகளுக்கு மழை, வாய்க்கால், ஓடைகளின் வழியே நீர்வரும்போது நீரோடு, களிம்பும், வண்டலும் சேர்ந்தே வரும்.

நீர்நிலைகள் தூர்ந்து போவதற்கு இது முக்கியமான காரணம். இதற்கு தீர்வு என்ன? தமிழரிடம் தீர்வு தெளிவாகவே இருந்தன.

மதகுகள் நீரை வெளியேற்றும் வேலையைச்செய்யும். குமிழிகள், நீரை வெளியேற்றுவதோடு, ஏரி, குளம், கண்மாய்களுக்குள் வாய்க்கால்களில் வந்துவிழும் வண்டல்களையும் அகற்றிவிடும்.

இந்தக்குமிழிப்பொறியியலை புரிந்துகொள்ளவேண்டுமானால், பண்டிதர் மணி.மாறனின் “தமிழ் இலக்கியங்களில் நீர் மேலாண்மை” என்ற ஆய்வுக்கட்டுரையை படிக்கவேண்டும்.

பாசனக்கால்வாய்களுக்கு தண்ணீரைத்திறந்துவிடும் பண்டைய தமிழ்ப்பொறி “குமிழி” ஆகும். குமிழிகள் ஏரிக்கரையில் மதகுகளைப்போல அமைக்கப்படுவதில்லை. ஏரிக்கரையிலிருந்து 200-300 அடிகள் தள்ளி
ஏரிக்குள்ளே அமைக்கப்படுவது குமிழி.

அறிந்தும் அறியாததும்

அடோல்ஃப் ஹிட்லர் டைம் இதழ்களின் 1938 ஆம் ஆண்டின் சிறந்த மனிதராக தேர்ந்தெடுக்கப்பட்டார்.

இளம் தேங்காய்களுக்குள் இருக்கும் திரவத்தை இரத்த பிளாஸ்மாவுக்கு மாற்றாக பயன்படுத்தலாம் என ஆய்வுகள் கூறுகின்றன.

ஒரு ஆய்வின் அடிப்படையில், ஒரு க்ரஷ் அதிகபட்சம் 4 மாதங்கள் மட்டுமே நீடிக்கும். அது மீறினால், நீங்கள் ஏற்கனவே காதலிக்கிறீர்கள்

ஒரு மைல் பயணம் செய்ய ஒரு ஸ்லோத்திற்க்கு ஒரு மாதம் ஆகும்.

எட்டு மணி நேரம் தொலைபேசியில் பேசும்போது நம் உடலில் 914 கலோரிகள் எரிகிறது. எட்டு மணி நேரம் காரை ஓட்டினால் சுமார் 1,219 கலோரிகள் எரியும்.

இராணுவம் இல்லாத ஒரே நாடு ஐஸ்லாந்து. இது பூமியில் மிகவும் அமைதியான மற்றும் பாதுகாப்பான நாடு.

1695 ஆம் ஆண்டில் நிறுவப்பட்ட இங்கிலாந்தின் பாங்க் ஆப் ஸ்காட்லாந்துதான் மிகப் பழமையான வங்கி.

உலகின் மிகப்பெரிய பத்து சிலைகளில் எட்டு புத்தர் சிலைகள்

குறுக்கெழுத்துப் புதிர்



வலமிருந்து இடம்:

1. மதுரையோடு சம்பந்தப்பட்டது "இந்த" மலர்
3. சுவை அறியும் "இது!
7. வெண்மையாக இருக்கும் இதன் எண்ணிக்கை 32
14. சிலை செய்பவர்

இடமிருந்து வலம்:

5.சீதோஷ்ணத்தோடு தொடர்புடையது "இந்த" அறிவிப்பு
10. வில்லோடு இணைந்நது. "இது"
12. அரசியல்வாதிகளை நம்பினால் இது கிடைக்கும் (இனிப்பு)
13. சிறுவர்கள் செய்வது. "இது"!

மேலிருந்து கீழ்:

1. மரத்தின் மேல் தோல்.......... இப்படி சொல்வர்.
2. மார்கழி என்றால் "இது" இல்லாமலா?
4. மழை என்றால் "இது" கவனத்திற்கு வரும்
5. நீல நிறத்துக்கு உதாரணம் "இது"!
9. பாம்பின் வசிப்பிடம் கலைந்துள்ளது.
10. விருப்பம்(ஒத்த சொல்)
13. தாயோடு சேர்த்து சொல்லப்படுவது

கீழிருந்து மேல்:

6. "இது" பச்சை நிறமாக இருப்பதற்கு காரணம் பச்சையம்.
8. நான்கு வகை தமிழ்ச் செய்யுள்களுள் ஒன்று. சரியாக இல்லை.
11. ரோஜா செடியில் இருப்பது
12. கடல் என்றால் "இது" இல்லாமலா?
15. தண்டவாளத்தோடு தொடர்புடையதது.

சித்திரமும் கைப்பழக்கம்





சுற்றுச்சூழலை பாதுகாப்போம்

சுற்றுசூழல் என்பது இந்த பூமியை சுற்றியுள்ள இயற்கை மற்றும் செயற்கை பொருட்களின் ஒரு தொகுப்பே ஆகும். இப்பொழுது இருக்கும் அறிவியல் வளர்ச்சியில் ஒரு பக்கம் நன்மைகள் இருந்தாலும் மறுபக்கம் தீமைகள் சற்று அதிகமாகவே இருக்கிறது என்று சொல்லலாம்.

சுற்று சூழல் மாசடைவதற்கான முக்கிய காரணிகள்:

நில மாசு

நீர் மாசு

ஒலி மாசு

நாம் இந்த பூமியில் வாழ்வது எவ்வளவு முக்கியமோ அதே அளவிற்கு தாவரங்களும், விலங்குகளும் இந்த நிலப்பரப்பில் வாழ்வது அவசியம். பாலிதீன் மற்றும் பிளாஸ்டிக் கழிவுகளை நிலத்தில் கொட்டுவதாலும், புதைப்பதாலும் நிலம் மாசடைகிறது.

நாம் தயாரிக்கும் இரசாயன பொருட்களிள் இருந்து வெளிவரும் இரசாயன கழிவுகள் மற்றும் தாவரங்களில் கலக்கப்படும் யூரியா, பூச்சிக்கொல்லிகள் போன்ற செயற்கை உரங்கள் நிலத்தின் தன்மையை மாசுபடுத்துவது மட்டும் இன்றி அதை உண்ணும் மனிதர்களுக்கும் பல நோய்கள் உருவாகிறது.

நீர் மாசு:

இப்புவியில் நீரின் அளவு 1.386 பில்லியன் கிலோமீட்டர் கனம் அதில் 97.5மூ உப்பு நீர் மற்றும் 2.5மூ நிலத்தடி நீர் ஆகும். நீர் மாசுபடுவதற்கான முக்கிய காரணம் நீரை சேமிப்பதற்கான வடிகால் வசதி இல்லாமல் இருப்பதே ஆகும். தொழிற்சாலை கழிவுகள் மற்றும் வீட்டு கழிவுகள் குளம், குட்டை, ஏறி போன்ற நீர் நிலைகளில் கலப்பதனாலும், விவசாயத்திற்கு பயன்படுத்தப்படும் நீரில் கிருமி நாசினிகளை பயன்படுத்துவதாலும் நீர் மாசு அடைகிறது.

ஒலி மாசு

பெரும்பாலான ஒலி மாசு மனிதர்கள் பயன்படுத்தும் வாகனங்கள், பேருந்து, தொழிற்சாலைகளில் பயன்படுத்தப்படும் ஒலி பெருக்கிகள், வீட்டில் உபயோகப்படுத்தப்படும் இயந்திரங்கள், பொழுதுபோக்கு இயந்திரங்கள் மற்றும் மனிதர்கள் பேசும்போது வெளிப்படும் ஒளியென இப்புவி பல ஒலிகளால் மாசு கொண்டு இருக்கிறது.

சூரியனிடமிருந்து தேவையான ஆற்றலை பூமிபெறுகிறது. கார்பன்-டை-ஆக்ஸைடு, மீத்தேன் மற்றும் நைட்ரஸ் ஆக்ஸைடு போன்ற வாயுக்கள் வாயு மண்டலத்தில் பரவியுள்ளன.

புவி வெப்பமயமாதல்:

இப்பொழுதெல்லாம் அந்தந்த பருவநிலைக்கு ஏற்ப மழை பொழிவதில்லை அதற்கான முக்கிய காரணம் மாறிவரும் வெப்பநிலையை ஆகும். வெப்பத்தின் அளவு அதிகரிப்பதால் நில வறட்சி, கடல் மட்டம் அதிகரிப்பது, வெள்ளம், பனிக்கட்டி உருகுவது அதிகரித்துள்ளது. அதனால் புயல், சூறாவளி போன்ற இயற்கை சீற்றங்களுக்கு காரணமாக உள்ளது. அதிக வெப்பத்தின் காரணமாக கடல் நீர் மட்டம் அதிகரித்தால் நில அரிப்பு, வெள்ள அபாயம் மற்றும் நீர் நிலைகள் உவர்ப்பாவதற்கான அபாயம் உள்ளது.

செப்டம்பர் 16-இல் சர்வதேச ஓசோன் தினத்தையும், ஜுலை 28-இல் உலக இயற்கை பாதுகாப்பு தினத்தையும் மற்றும் மார்ச் 22-இல் உலக நீர் தினத்தையும் சர்வதேச அமைப்புகள் கொண்டாடுகின்றன. வளர்ந்து வரும் சந்ததியிடம் மற்றும் மக்களிடம் சுற்றுச்சூழல் பாதுகாப்பு அவசியத்தை எடுத்துரைப்பது மிக அவசியம்.

நாம் செய்யும் எந்த ஒரு செயலும் சுற்று சூழலை பாதிக்காமல் செய்து நம் வருங்கால சந்ததியிடம் ஒப்படைப்பது நம் அனைவரின் கடமை என்பதை நினைவில் வைத்து கொள்வது அவசியம்.

மரம் நடுவோம்! மழை பெறுவோம்! மாசு இல்லா சுற்று சூழலை உருவாக்குவோம்

உடன் பிறவா சகோதரி

உடன்பிறவா சகோ...
அன்பிற்கு உருவேது
அன்பிற்கு உறவேது

பாசம் காட்டினேன்
பல்லுள்ள பாம்பென்றார்
நேசம் காட்டினேன்
வேசம் போட்ட
தீயோன் என்றார்

மனதளவில் சபலம் இல்லை
துளியளவும் சஞ்சலம்
இல்லை
நான் காட்டிய அன்பு
ஒரு பொழுதும் பொய்த்ததும் இல்லை

உறவென்னவோ
அக்கை தம்பி தான்
ஆனால் பார்ப்போர் கண் பாழாகிப்போயிட்டே

நல் உறவை நகையாடி உடைத்திட்டே
என் மனதில் நீங்கா துயரை
விதைத்திட்டே

காலமும் கூடிவரும்
கயவர் எண்ணங்களும் மாறிவிடும்
காலன் வந்து எனை அழைக்க முன் கதைபேசி அக்கா நீ சென்றால் தீரா வடு ஆறிவிடும்

பார்ப்போர் கண்கள்
பாம்பாகிப் போனால்
உறவாய் ஏற்போர் நெஞ்சம் பாழாகிப் போகும்



கேட்போர் காதுகள் வசைபாடிப்போனால்
எனது கேட்கும் காதுகள் செவிடாகிப் போகும்

தீயோனாய் நானிருந்தால் உனை மறந்து சென்றிருப்பேன் அக்கா
நல்லவனாய் நானிருக்க் தவிப்புடனே உன் அழைப்பிற்காய் காத்திருப்பேன் அக்கா
எதிர் பார்த்திருப்பேன் அக்கா

இன்னொருவர் குறை சொல்ல நம் உறவு கெட்டதில்லை
அக்கை தம்பி நல் உணர்வை முட்டாள் உலகம் மதித்ததில்லை

– சனு ஜெய்

இரத்ததானம் செய்

தானத்தில் சிறந்ததொரு தானம்
நிதானம் என்பர் சிலர்...
ஆனால் உள்ளவை அனைத்தையும் விட
உண்மையான தானம்
அத்தனை பேருக்கும் உயிர் தரும்
ரத்த தானம் ஒன்றுதான்...
உயிர்களை பிழைக்க வைக்கும்
உன்னதமான செயல் அதுதான்...
எவ்வளவு கொடுத்தாலும் – நம்மில்
எள்ளளவும் குறையாத செல்வமதை,
”கொடுத்தது தான் கொடுத்தான்,
அதை யாருக்காக கொடுத்தான்...
ஒருத்தருக்கா கொடுத்தான் – இல்லை,
அனைவருக்கும் கொடுத்தான்...”
கொடுக்க கொடுக்க நம்மிடம்
கொழிக்கும் செல்வமே குருதி...
அதை தானம் செய்துப்பார் – உன் வாழ்வு செழிப்படையும் என்பது உறுதி...
பிறருக்கு வாழ்வளித்து, உன்
வாழ்வை செம்மை படுத்திக்கொள்...
குருதி – பிறருக்கு உயிர் தரவே – எனக்
கருதி, தானம் செய்,
ரத்ததானம் செய் – அதை
ஒத்த தானம் இல்லை!!

குருதிக்கொடை

உக்கி
உடைந்து
உதிர்ந்து போகும் உடல் தான்
இது என்றோ,
உயிர்
மக்கி
மடிந்து
மண் வீழும் முன்னே,
கக்கி முழுதாய் கொடுத்திட
வேண்டாம்
உடல்
ஒட்டி ஒழுகும் சில துளி போதும்
உன் போல் ஒரு
உயிர் வாழ,
உயிர் கொடு நண்பா
உதிரம் கொண்டு
இனி,
இதயம் கொடுத்து அல்ல
இரத்தம் கொடுத்து காதல் செய்வோம்
இரத்த தானம் செய்வோம்..

வாசி

உலக இரத்த தான தினம்
ஜுன் 14

மருத்துவ பக்கம்

தூதுவளை பொதுவாக தெற்காஆசிய நடுகள் அனைத்திலும் பயிராகக்கூடிய கற்பக மூலிகைகளில் ஒன்று. இதற்கு தூதுவளை, சிங்கவல்லி, அளர்க்கம் என்று பல பெயர்கள் உண்டு. தோட்ட வேலிகளில் வளரும் ஒருவகை கொடியாகும். சிறு முட்கள் நிறைந்து காணப்படும். இதன் இலை, பூ, காய், வேர் அனைத்தும் மருத்துவப் பயன்கள் கொண்டது.

தூதுவளை பயன்கள்

தூதுவளை இலையைப் பறித்து நன்கு சுத்தம் செய்து அதனுடன் மிளகு, சின்னவெங்காயம், பூண்டு சேர்த்து நன்கு வதக்கி துவையல் செய்து ஒரு மண்டலம் சாப்பிட்டு வந்தால் உடலுக்கு வலு கொடுப்பதுடன் இருமல், இரைப்பு, சளி முதலியவை நீங்கும்.

தூதுவளையில் கால்சியம் சத்து அதிகம் நிறைந்துள்ளதால் எலும்பையும், பற்களையும் பலப்படுத்தும். அதனால் தூதுவளைக் கீரையை பருப்புடன் சேர்த்து சமைத்து நெய் சேர்த்து 48 நாட்கள் சாப்பிட்டு வரவேண்டும்.

வாதம் மற்றும் பித்தத்தால் ஏற்படும் நோய்களைக் குணப்படுத்த மிளகு கல்பகம் 48 நாட்கள் சாப்பிட்டபின், தூதுவளைக் கீரை சமையல் 48 நாட்கள் சாப்பிட்டு வந்தால் வாத, பித்த நோய்கள் தீரும்.

தூதுவளையை நிழலில் உலர்த்தி பொடியாக்கி வைத்துக் கொண்டு காலை, மாலை என இருவேளையும் தேனில் கலந்து பத்தியம் இருந்து ஒரு மண்டலம் சாப்பிட்டு வந்தால் இருமல், இளைப்பு நீங்கி உடல் வலுவடையும். உடலுக்கு நோய் எதிர்ப்பு சக்தி கொடுக்கும். ஜீரண சக்தியைத் தூண்டும்.

தூதுவளையை நன்கு அரைத்து அடை போல் செய்து சாப்பிட்டு வந்தால் தலையில் உள்ள கபம் குறையும். காது மந்தம், இருமல், நமைச்சல் பெருவயிறு மந்தம் போன்றவற்றிற்கு தூதுவளைக் கீரை சிறந்த மருந்தாகும்.

மூக்கில் நீர் வடிதல், வாயில் அதிக நீர் சுரப்பு, பல் ஈறுகளில் நீர்சுரத்தல், சூலை நீர், போன்றவற்றிற்கு தூதுவளைக் கீரை சிறந்த மருந்து. தூதுவளைக் காயை சமைத்தோ, அல்லது வற்றல், ஊறுகாய் செய்து ஒரு மண்டலம் கற்பக முறைப்படி உண்டு வந்தால் கண்ணில் உண்டான பித்த நீர் அதிகரிப்பு, கண் நோய் நீங்கும்.

தூதுவளைக் கீரை, வேர், காய், இவற்றை வற்றல், ஊறுகாய் செய்து நாற்பது நாட்கள் சாப்பிட்டு வந்தால் கண்ணெரிச்சல், கண் நோய்கள் நீங்கும். தூதுவளை இலையை குடிநீர் செய்து அருந்தி வந்தால் இருமல், இரைப்பு நோய் அணுகாது.

மேற்கண்ட கற்பக முறைப்படி தூதுவளையை உண்டு வந்தால் நீண்ட ஆயுளைப் பெறலாம்.

தளத்தின் தடங்கள்

பசுமை முதலீடுகள் புதுப்பிக்கத்தக்க ஆற்றல் – ஆன்லைன் படிப்பு
04.05.2024

வெற்றி பெற பேசுங்கள் – பயனுள்ள உரையாடல்களுக்கான நுட்பங்கள் – அமர்வு
04.05.2024

தொழில் பாதை
Career path

2வது ஆன்லைன் பாடத் தேர்வு
08.05.2024

விருட்சம் இதழ் வெளியீடு
08.05.2024

சிவி மேக்கிங் ஞ லைட்ரூம் ஆப்
CV MAKING

இரத்த தானம்
11.05.2024

உணவு திருவிழா
12.05.2024

Inauguration - Thiral

இலக்கு (எதிர்கால இலட்சியம்,
உயர்தர பாடத்தெரிவுகள்,
எதிர்கால தொழில் வாய்ப்புகள்)
21.05.2024

குழு உருவாக்கம் சிக்கல் தீர்க்கும் அமர்வு
22.05.2024

செயற்கை நுண்ணறிவு கருவிகள்
23.05.2024

விமான டிக்கெட் வகுப்பு
23.05.2024

கேன்வா (கிரபிக் டிசைனிங் அப்ளிகேஷன்)
Grapic Design & Applications
24.05.2024

இயற்கை விவசாயம் மற்றும்
இயற்கை சார் வாழ்வியல்
27.05.2024

ஆளுமை வளர்ச்சி
29.05.2024

அடிப்படை புகைப்படம் எடுத்தல்
மற்றும்
கேமரா கையாளுதல்
25.05.2024

டிஜிட்டல் மார்க்கெட்டிங்
30.05.2024

போதையால் மடியும் வாழ்வு

மனிதாபிமாணம் இல்லாத
முட்டாள் மதுவே,
மனித உயிரை காவுவது
நியாயம் தானா?

பட்டம் பெற்று பலரும் போற்றும் படி
வளரும் சமுகத்தினர்
மண்டியிட்டுக் கொண்டு
சிறையில் கிடப்பது சுகமோ"

யோசி, யோசி
போதை எனும் கொடியவனை
நாட்டில் இருந்து துரத்து
நிம்மதியான வாழ்வை வாழ
மதுவை துரத்து

சின்னஞ் சிறு சிறுவர்கள்
சிலையாய் வடிவம் பெற
வேண்டியவர்கள் அவர்களை
சிதைக்கும் போதை
ஏனோ?

முட்டாள் மனிதா
முழுதும் உன் கையில்
ஒழுக்கம்
குடும்பம்
கல்வி
சமூகம்

இதை நினைவில் கொள்

போதை என்னும் போரிலே
துவண்டு மடியும் வாழ்வு
துல்லியமான வாழ்வோ

காணும் இடமெல்லாம் கள்ளும்
மகிழும் இடமெல்லாம் மரதுவும்.
போகும் இடமெல்லாம் போதையும்
குவிந்து கிடப்பது ஏனோ?

பாலியல் துஷ்பிரயோகமும்
பாஞ்சாலி சபதமாய் ஒரு தொடர் கதையே.
என்றோடு
முடியும் போதையின் கதையும்
எல்லாம்

தி.மு.மல்லிகைத்தீவு மகா வித்தியாலயம்

பண்டைய ஏழு அதிசயங்கள்

- கிசாவின் பெரிய பிரமிட் (எகிப்து): பழங்கால அதிசயங்களில் ஒன்று மட்டுமே இன்னும் உள்ளது. பார்வோன் குஃபுவின் கல்லறையாக கட்டப்பட்டது.

- பாபிலோனின் தொங்கும் தோட்டங்கள் (ஈராக்): பழங்கால நகரமான பாபிலோனில் கட்டப்பட்டதாகக் கூறப்படும் கட்டுக்கதை தோட்டங்கள், அவற்றின் இருப்பு விவாதத்திற்கு உட்பட்டது.

- ஒலிம்பியாவில் உள்ள ஜீயஸின் சிலை (கிரீஸ்): சிற்பி ஃபிடியாஸால் செய்யப்பட்ட ஜீயஸின் ஒரு பெரிய உட்கார்ந்த உருவம்.

- எபேசஸில் உள்ள ஆர்ட்டெமிஸ் கோயில் (துருக்கி): ஆர்ட்டெமிஸ் தெய்வத்திற்கு அர்ப்பணிக்கப்பட்ட ஒரு பெரிய கோயில்.

- ஹாலிகார்னாசஸில் உள்ள கல்லறை (துருக்கி): பாரசீகப் பேரரசின் சட்ராப் மவுசோலஸ் மற்றும் அவரது மனைவிக்காக கட்டப்பட்ட கல்லறை.

- கோலோசஸ் ஆஃப் ரோட்ஸ் (கிரீஸ்): ரோட்ஸ் நகரில் அமைக்கப்பட்டுள்ள சூரியக் கடவுளான ஹீலியோஸின் மாபெரும் சிலை.

- அலெக்ஸாண்டிரியாவின் கலங்கரை விளக்கம் (எகிப்து): மாலுமிகளுக்கு வழிகாட்டுவதற்காக ஃபரோஸ் தீவில் டோலமிக் இராச்சியத்தால் கட்டப்பட்ட உயரமான கோபுரம்.

புதிய ஏழு அதிசயங்கள்

2007 இல் New 7 Wonders அறக்கட்டளை நடத்திய உலகளாவிய கருத்துக்கணிப்பின் மூலம் உலகின் புதிய ஏழு அதிசயங்கள் தேர்ந்தெடுக்கப்பட்டன.

- சீனப் பெருஞ்சுவர் (சீனா): சீன அரசுகள் மற்றும் பேரரசுகளைப் பாதுகாப்பதற்காகக் கட்டப்பட்ட பல்வேறு பொருட்களால் செய்யப்பட்ட கோட்டைகளின் தொடர்.

- பெட்ரா (ஜோர்டான்): பாறையால் வெட்டப்பட்ட கட்டிடக்கலை மற்றும் நீர் வழித்தட அமைப்புக்கு புகழ்பெற்ற தொல்பொருள் நகரம்.

- கிறிஸ்ட் தி ரிடீமர் (பிரேசில்): ரியோ டி ஜெனிரோவில் உள்ள இயேசு கிறிஸ்துவின் ஒரு பெரிய சிலை, அதன் சின்னமான திறந்த கை தோரணைக்கு பெயர் பெற்றது.

- மச்சு பிச்சு (பேரு): ஆண்டிஸ் மலைகளில் உயரமாக அமைக்கப்பட்ட இன்கான் கோட்டை.

- சிச்சென் இட்சா (மெக்சிகோ): மாயா நாகரிகத்தால் கட்டப்பட்ட ஒரு பெரிய கொலம்பிய தொல்பொருள் தளம்.

- ரோமன் கொலோசியம் (இத்தாலி): ரோமில் உள்ள ஒரு பழங்கால ஆம்பிதியேட்டர், கிளாடியேட்டர் போட்டிகளுக்கும் பொதுக் காட்சிகளுக்கும் பெயர் பெற்றது.

- தாஜ்மஹால் (இந்தியா): ஒரு வெள்ளை பளிங்கு மவுஸ்

திருகோணமலை புகையிரத நிலையம்

இலங்கையின் பசுமையான புகையிரத நிலையமாக திருகோணமலை புகையிரத நிலையம் தெரிவுசெய்யப்பட்டுள்ளது .

இலங்கை மத்திய சுற்றாடல் அதிகார சபையினால், இலங்கையில் உள்ள சகல புகையிரத நிலையங்களுக்கும் இடையே நடாத்தப்பட்ட பசுமையான புகையிரத நிலையத்திற்கான தேர்வில் தெரிவாகிய எட்டு புகையிரத நிலையங்களில் திருகோணமலை புகையிரத நிலையமும் இடம்பெற்றுள்ளது. வடக்கு கிழக்கு மாகாணங்களில் தெரிவு செய்யப்பட்ட ஒரே ஒரு புகையிரத நிலையம் திருகோணமலை புகையிரத நிலையம் ஆகும்.

சுற்று சூழல் தினத்தை முன்னிட்டு ஜனாதிபதி செயலகத்தில், ஜனாதிபதி தலைமையில் நடைபெற்ற விருது வழங்கல் வைபவத்தில் பசுமையான புகையிர நிலையத்திற்கான சான்றிதழ் திருகோணமலை புகையிர நிலைய அதிபர் திரு. சர்வேஸ்வரன் அவர்களுக்கு வழங்கி கௌரவிக்கப்பட்டார்.

இந்த கௌரவம் கிடைத்தமை எமக்கும், எம் மண்ணிற்கும் பெருமையளிக்கின்றது.



தளத்தின் ஆடி மாத திட்டங்கள்



- மேலைத்தேய நடன வகுப்புக்கள் வார இறுதி நாட்களில் இடம்பெற அதற்கான இடம் ஒதுக்கீடு செய்யப்படும்.
- ஒவ்வொரு சனிக்கிழமையும் 5.00 – 6.00 வரை அரசியல் சார் விடயங்கள் தொடர்பில் கலந்துரையாடல் அமர்வு மேற்கொள்ள ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது.
- நேரடி அமர்வுகளில் கலந்து கொள்ள இயலாத சமூகத்தவரை கருத்திற் கொண்டு சனிக்கிழமைகளில் நிகழ்நிலை அமர்வுகள் நடத்த ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது.
- போட்டி பரீட்சைக்கான தயார்ப்படுத்தலை இலக்காகக் கொண்டு ஆரம்பிக்கப்பட்ட அறிவாய்வியல் அமர்வுகள் வார இறுதி நாள் நடத்தப்பட உத்தேசிக்கப்பட்டுள்ளது
- விருட்சம் இதழ் வெளியீட்டிற்கான மாதாந்த கலந்துரையாடல்.
- தளம் – மாதாந்த கலந்துரையாடல் களப்பயணம்
- தசமம்
- விமான பயணச்சீட்டு வகுப்பு

அடுத்த மாத இதழுக்கான தலைப்பு

- செயற்கரிய யாவுள நட்பு
- நெகிழியற்ற உலகம்

இந்த தலைப்பில் உங்கள் கட்டுரை, கவிதை, கைத்தொலைபேசி புகைப்படம், ஓவியம்

கருத்துகள் போன்றவற்றை எழுதி அனுப்பி வைக்கலாம்

இந்த இதழில் இடம் பெற்ற புதிர்க ளுக்கு உங்கள் விடைகளை அனுப்ப வேண்டிய தொலைபேசி இலக்கம் - 077 624 3212

முகவரி
முதல் மாடி, நகராட்சிமன்ற கட்டடத்தொகுதி, கடற்படைத்தள வீதி, திருகோணமலை.

தொலைபேசி இலக்கம் -
077 624 3212

வலமிருந்து இடம்	இடமிருந்து வலம்	மேலிருந்து கீழ்
4 .தடை	1. அறுபத்து மூவர்	1. அதியமான்
6.சிரை	5. யஜீர்	2. பயிர்
8.. மீமன்	7.மீரா	3. மூதுரை
10.அஷ்ட		6. சித்தி
		8. மர்

Mobile Photography Credits

S . தினேஷ்
S . கோகிலன்
P . மிருபன்

கைத்தொலைபேசியின் புகைப்படம்







இதழாசிரியர் குழாம் விபரம்

செல்வி. ஜிதுஷா அன்டன் ஜூட்
தலைமை ஆசிரியர்

இதழ் ஆசிரியர் குழுமம்

ந.பிரதீஷன்

செல்வி ஞா. நிதர்சனா

பொ.பிரணவன்

பிரியராம் ஷாமலாதேவி சிவபாலசிங்கம்

தனிஸ்டன்
வடிவமைப்பாளர்

தளம்
THALAM

எமது மண்ணுக்காய் தளத்தின் குரல் எப்பொழுதும் ஒலித்துக்கொண்டே இருக்கும்